# 1/2014-T

Maximum : 100 marks

Time : 1 hour and 15 minutes

1. ஒரு வகுப்பில் 40 குழந்தைகளின் சராசரி வயது 14. டீச்சருடைய வயதும் சேர்த்தால் வகுப்பின் சராசரி 1 கூடுகிறது. அப்படியானால் டீச்சரின் வயது எத்தனை?

   (A) 50
   (B) 55
   (C) 54
   (D) 51

2. ராமு ஒரு வேலையை 6 நாட்களிலும், ராஜு அதே வேலையை 18 நாட்களிலும் செய்வார்கள். இரண்டு பேரும் சேர்ந்து வேலை செய்தால் அந்த வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிக்கலாம்?

   (A) 4
   (B) 5
   (C) 4.5
   (D) 5.5

3. $4, 8, x$ இவை ஒரே விகிதத்தில் (proportion) ஆனால் $x$ ன் மதிப்பு என்ன?

   (A) 12
   (B) 10
   (C) 16
   (D) 11

4. $42.03 + 1.07 + 2.5 + 6.432 =$

   (A) 54.132
   (B) 52.032
   (C) 52.132
   (D) 52.232

5. கீழ்வருபவற்றுள் சிறிய பின்ன எண் எது?

   (A) $\frac{8}{9}$
   (B) $\frac{8}{10}$
   (C) $\frac{8}{15}$
   (D) $\frac{8}{8}$

6. கீழ்வரும் எண்களில் தனித்து நிற்கும் எண் எது?

   (A) 732
   (B) 543
   (C) 606
   (D) 605

7. 1, 22, 333, 4444, 55555, ....., என்ற வரிசையில் 12 ஆம் பதத்தில் இலக்கங்களின் தொகை எவ்வளவு?

(A) 36 (B) 48

(C) 144 (D) 120

8. அனுவின் இப்போதைய வயது 3 வருடங்களுக்குப் பிறகு உள்ள வயதினுடையவும் 3 வருடங்களுக்கு முன்புள்ள வயதினுடையவும் வித்தியாசத்தின் 3 மடங்காகும். அனுவின் இப்போதைய வயது என்ன?

(A) 15 (B) 16

(C) 18 (D) 12

9. $3 \times 3 - 3 \div 3 \times 3 \div 3 - 3$ எவ்வளவு?

(A) 6 (B) 3

(C) 9 (D) 5

10. $a \times \frac{a}{8} \times \frac{a}{27} = 1$ ஆனால் $a$ எவ்வளவு?

(A) 6 (B) 3

(C) 7 (D) 4

11. 5,9,4,8,3,7 ...... என்ற வரிசையின் அடுத்த எண் எது?

(A) 5 (B) 2

(C) 4 (D) 3

12. ஒரு கடிகாரத்தில் நேரம் 12.15 ஆனால் மணி முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே அமையும் கோணத்தின் அளவு என்ன?

(A) $90^{\circ}$ (B) $72\frac{1}{2}^{\circ}$

(C) $82\frac{1}{2}^{\circ}$ (D) $70^{\circ}$

13. கடிகாரத்தில் நேரம் 9.20 ஆகும்போது கண்ணாடியில் அதன் பிரதிபிம்பம் காட்டும் நேரம் எவ்வளவு?

(A) 2.40 (B) 3.50

(C) 11.60 (D) 6.20

14. 2012 அக்டோபர் 1 திங்கட்கிழமை என்றால் 2012 நவம்பர் 1 எந்தக் கிழமை?

(A) செவ்வாய்
(B) புதன்
(C) வியாழன்
(D) வெள்ளி

15. அரைகோள வடிவான ஒரு பாத்திரத்தில் 3 லிட்டர் தண்ணீர் விடலாம். அப்படியானால் அதன் இருமடங்கு ரேடியஸ் உள்ள இன்னொரு அரைகோள வடிவத்திலுள்ள பாத்திரத்தில் எவ்வளவு லிட்டர் தண்ணீர் விடலாம்?

(A) 9
(B) 12
(C) 18
(D) 24

16. $3^7 + 3^7 + 3^7 = 3^x$ ஆனால் $x$ எவ்வளவு?

(A) 8
(B) 21
(C) 4
(D) 3

17. 6ன் கூறுகளின் **reciprocal** களின் தொகை எவ்வளவு?

(A) 12
(B) $\frac{5}{6}$
(C) 2
(D) 1

18. $\frac{1}{2}+\frac{1}{4}+\frac{1}{8}+\frac{1}{16}+\frac{1}{32}+\frac{1}{64}+\frac{1}{128}+x=1$ என்றால் $x$ ன் மதிப்பு என்ன?

(A) $\frac{1}{2}$
(B) $\frac{1}{8}$
(C) $\frac{1}{32}$
(D) $\frac{1}{128}$

19. தொடர்ச்சியான முதல் எத்தனை ஒற்றை எண்களின் தொகை 100?

(A) 9
(B) 10
(C) 8
(D) 11

20. 5ன் 80 சதமானம் 4 ஆனால் 4ன் எத்தனை சதமானம் 5?

(A) 125%
(B) 80%
(C) 100%
(D) 150%

21. ஒரு கண்டக்டரிலோ சுருளிலோ பேக் (Back) E.M.F. ஏற்படும் தன்மை எவ்வாறு அறியப்படுகின்றது?
(A) மியூச்சுவல் இன்டக்ஷன்
(B) செல்ஃப் இன்டக்ஷன்
(C) தாம்ஸன் எஃபக்ட்
(D) இவை எதுவும் அல்ல

22. எம்.எஸ். சுவாமிநாதன் உருவாக்கி எடுத்த கோதுமை வகை எது?
(A) கிரிஜா
(B) ஸோனா
(C) ஸோனாலிகா
(D) ஸர்பதி ஸொனோரா

23. கீழ்வருபவற்றுள் கலப்பு இனம் பசு எது?
(A) சுனந்தினி
(B) வெச்சூர் பசு
(C) காஸர்கோடு ஸ்வார்ஃப்
(D) ஸிந்தி பசு

24. எந்த நோயின் அறிவியல் பெயர் 'பொவைன் ஸ்பாஞ்சிஃபாம் என்ஸ்ஃபலோப்பதி'?
(A) மனநிலை பரபரப்பு
(B) பறவைக் காய்ச்சல்
(C) பன்றிக் காய்ச்சல்
(D) பிராந்திப்பசு நோய்

25. பி.டி. வழுதுணையில் பி.டி. (B.T.) யின் முழுவடிவம் :
(A) பெய்ஸிலஸ் டென்டோர்டு டெக்னாலஜி
(B) பயோ டெக்னாலஜி
(C) பிளென்டிங்டெக்னாலஜி
(D) பெய்ஸிலஸ் தியூரின் ஜியன்ஸிஸ்

26. தேசிய கிரிக்கெட் அக்காதமியின் செயர்மேன் :
(A) என். ஸ்ரீனிவாசன்
(B) டி.ஸி. மாத்யூ
(C) ஜயேஷ் ஜார்ஜ்
(D) கே. ஜெயராம்

27. ஐக்கிய நாடுகள் சபை சார்பிலான ரசாயனக் கருவிகள் தடுப்பு இயக்கம் எது?
(A) OPCW
(B) CWBTO
(C) OPEC
(D) IUCN

28. விண்வெளியில் பொருட்களைக் கொண்டு செல்ல அமெரிக்கா செலுத்தி வெற்றிபெற்ற மனிதன் இல்லாத விண்கலம் :
(A) ஸைக்னஸ்
(B) மெரீனர்–10
(C) எக்ஸ்கவேட்டர்
(D) ஒடீஸி

29. அரேபியா டெரா என்னம் குழி எங்கு காணப்படுகிறது?
(A) சந்திரனில்
(B) செவ்வாயில்
(C) புதனில்
(D) யுரானஸில்

30. 2013 ல் உலக அழகிப் பட்டத்தை வென்றவர் :
(A) மேகன் யங்
(B) ஸோனி ஆன்ட்ருஸ்
(C) ஸிலீனா மரியா
(D) ஜிமுகின் திமித்ரி

31. போலிவுட் (Bollywood) நடிகர் சஞ்சயத்தை அடைத்திருக்கும் சிறைச்சாலை எது?
(A) எர்வாடா சிறை
(B) திகார் சிறைச்சாலை
(C) பிர்ஸா முண்டா மத்தியச் சிறை
(D) வியூர் சிறைச்சாலை

32. ''பள்ளிக்கூடத்தில் தரையில் இருந்து படிப்பது எனக்குப் பிரச்சினை அல்ல – எனக்கு வேண்டியது கல்வி'' என்று கூறியவர் :

(A) ஜார்ஜ் வாஷிங்டன்
(B) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
(C) மலாலா யூஸப் ஸாய்
(D) கே. ஆர். நாராயணன்

33. சமீபத்தில் காலமான ஜனரல் வோ யென்ஙுயென் கியாப் எந்த நாட்டின் புரட்சித் தலைவர்?

(A) சீனா
(B) பங்களாதேஷ்
(C) வியட்நாம்
(D) ஸொமாலியா

34. ''கிரவுச்சிங் டைகர் ஆன்ட் ஸேக்ரட் கௌஸ்'' என்னும் நூலின் ஆசிரியர்?

(A) பாப்ளோ நெருதா
(B) அனிதா தேசாய்
(C) தஸ்லீமா நஸ்ரீன்
(D) அருண்குமார்

35. 2013ல் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு வழங்கியது எந்த ஆராய்ச்சிக்கு?

(A) எயிட்ஸுக்கு மருந்து
(B) தாவர உணவு ரகசியம்
(C) செல் (cell) களில் கார்கோ அமைப்பு
(D) செயற்கை ஜீன்கள் பயன்படுத்தி இன அழிவு எதிர் கொள்ளும் உயிரினங்களைப் பாதுகாத்தல்

36. $4cm^2$ பரப்பளவுள்ள ஒரு ஸோலார் ஸெல்லுக்குத் தர முடிகின்ற மின்சாரம் எவ்வளவு?

(A) 20 மில்லி ஆம்பியர்
(B) 60 மில்லி ஆம்பியர்
(C) 120 மில்லி ஆம்பியர்
(D) 150 மில்லி ஆம்பியர்

37. நிலையான வெப்பத்தில் ஒரு வாயுவின் வால்யூமும் அழுத்தமும் விபரீத விகிதத்திலாகும் **(proportion)** இந்தக் கொள்கை எந்தப் பெயரில் அறியப்படுகின்றது?

(A) பாயில் நியமம்
(B) சால்ஸ் நியமம்
(C) கேலு ஸாக்கின் நியமம்
(D) அவகாட்ரோ நியமம்

38. கீழ்வருபனவற்றுள் ஆன்டி பைரட்டிக்குகள் எந்த வகையைச் சார்ந்தது?

(A) குளோரோம் ஃபெனிக்கால்
(B) ஆம்பிஸிலின்
(C) பேராஸைட்டமோல்
(D) நோவால்ஜின்

39. என்டோஸல்ஃபானின் முக்கிய கூறு என்ன?

(A) ஆர்கனோ போஸ்ஃபேட்
(B) ஆர்கனோ நைட்ரேட்
(C) ஆர்கனோ சல்பேட்
(D) ஆர்கனோ குளோரைடு

40. மிகவும் உயரம் கூடின பூக்கும் தாவரம் எது?

(A) ஸெக்குவயா
(B) யூக்கலிப்டஸ்
(C) மூங்கில்
(D) பைன்மரம்

41. ரூர்க்கலா இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைந்துள்ள மாநிலம் எது?

(A) ஒரீஸா
(B) பீஹார்
(C) மத்திய பிரதேசம்
(D) உத்தர் பிரதேசம்

42. இந்தியாவின் மிகவும் கிழக்கு எல்லையிலுள்ள மாநிலம் எது?

(A) அஸாம்
(B) ஜார்கண்ட்
(C) பீஹார்
(D) அருணாச்சல் பிரதேசம்

43. ஹிராக்குட் நதிக்கரைத் திட்டத்துடன் தொடர்புடைய நதி எது?

(A) கிருஷ்ணா
(B) கோதாவரி
(C) மஹாநதி
(D) காவேரி

44. இந்தியா வழியாகக் கடந்து செல்லும் முக்கிய அட்சாம்ச ரேகை எது?

(A) உத்தராயன ரேகை
(B) பூமத்திய ரேகை
(C) தட்சிணாயன ரேகை
(D) ஆர்ட்டிக் வட்டம்

45. இந்தியாவில் மிக அதிகமாக மேஜர் துறைமுகங்கள் அமைந்துள்ள மாநிலம் எது?

(A) கேரளம்
(B) தமிழ்நாடு
(C) ஆந்திரப்பிரதேசம்
(D) ஒரீஸா

46. காந்தி–இர்வின் ஒப்பந்தம் ஒப்பிடப்பட்ட ஆண்டு எது?

(A) 1934
(B) 1930
(C) 1931
(D) 1932

47. எந்தப் போராட்டத்துடன் தொடர்புபடுத்தி மன்னத்து பத்மநாபனின் தலைமையில் மேல்ஜாதி ஊர்வலம் நடத்தப்பட்டது?

(A) சம்பாரன் போராட்டம்
(B) உப்பு சத்தியாக்கிரகம்
(C) குருவாயூர் சத்தியாக்கிரகம்
(D) வைக்கம் சத்தியாக்கிரகம்

48. இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் யார்?

(A) ஹோமி. ஜெ. பாபா
(B) விக்ரம் சாராபாய்
(C) ஏ.பி.ஜே. அப்துல்கலாம்
(D) அருண் திவாரி

49. இந்திய தேசிய காங்கிரஸின் நோக்கம் 'பூரண சுவராஜ்' என அறிவிக்கப்பட்ட 1929 ஆம் ஆண்டு மாநாடு எங்கு நடைபெற்றது?

(A) லாகூர்
(B) டெல்லி
(C) கான்பூர்
(D) ஆக்ரா

50. சுதந்திர இந்திய அரசு முதன்முதலாக நியமித்த உயர் கல்விக் கமிஷனின் தலைவர் யாராக இருந்தார்?

(A) டி.எஸ். கோத்தாரி
(B) ஜாண் ஸார்ஜண்ட்
(C) டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்
(D) லட்சுமண சுவாமி முதலியார்

51. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்குத் தெளிவான திட்டம் வகுத்தவர் யார்?

(A) வி.பி. மேனோன்
(B) சர்தார் வல்லபாய் பட்டேல்
(C) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
(D) ஜவஹர்லால் நேரு

52. தாஜ்மகால் எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?

(A) சிந்து
(B) யமுனா
(C) மகாநதி
(D) காவேரி

53. 'அஷ்டபிரதான்' என அறியப்படுவது யாருடைய அமைச்சரவை?

(A) சிவாஜி
(B) அக்பர்
(C) கிருஷ்ணதேவராயர்
(D) பாபர்

54. இந்தியாவின் மிகவும் நீளம் கூடிய தேசியச் சாலை எது?

(A) NH 10
(B) NH 5
(C) NH 17
(D) NH 7

55. 1857ல் முதல் சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்தது எங்கே?

(A) காண்பூர்
(B) குவாலியர்
(C) மீரட்
(D) பரத்பூர்

56. இந்திய ஃபெடரல் அமைப்பின் பாதுகாவலர் என அறியப்படுபவர் யார்?

(A) ஜனாதிபதி
(B) அடிப்படை உரிமைகள்
(C) உச்ச நீதிமன்றம்
(D) பிரதம மந்திரி

57. இந்திய அரசியல் சட்டத்தில் விவஸ்தை செய்யப்பட்டுள்ள ரிட்களின் எண்ணிக்கை :

(A) 5
(B) 6
(C) 3
(D) 4

58. இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் செயல்படத் தொடங்கியது எந்த ஆண்டு முதல்?

(A) 1954
(B) 1951
(C) 1953
(D) 1950

59. இந்தியாவின் திட்டக் கமிஷன் செயர்மேன் யார்?

(A) மத்திய நிதி அமைச்சர்
(B) பிரதம மந்திரி
(C) ஜனாதிபதி
(D) ரிசர்வ் பேங்க் கவர்னர்

60. இந்தியாவின் மத்திய வங்கியான ரிசர்வு பேங்க் ஆப் இந்தியாவின் தலைமை இடம் எங்கே உள்ளது?

(A) டெல்லி
(B) சென்னை
(C) ஜம்ஷெட்பூர்
(D) மும்பை

61. எத்தனாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'பெண் சக்திப்படுத்தல்' முக்கிய இனம் ஆக்கப்பட்டது?

(A) 10
(B) 8
(C) 7
(D) 9

62. கேரளத்தின் மகளிர் கமிஷனின் (Women's Commission) முதல் செயர் பேர்ஸன் யாராக இருந்தார்?

(A) விஸி ஜோஸ்
(B) பி. சுகதகுமாரி
(C) எம். கமலம்
(D) எம். லீலாவதி

63. மனித உரிமை எண்ணத்திற்கு ஊக்கம் அளித்த அமைப்பு எது?

(A) லீக் ஆப் நேஷன்ஸ்
(B) உலக சோஷியல் ஃபாரம்
(C) லோபயான்
(D) ஐக்கிய நாடுகள் சபை

64. தேசிய மனித உரிமைக் கமிஷனின் தலைவர் யார்?

(A) ஜனாதிபதி

(B) உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்தவர்

(C) உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்தவர்

(D) கவர்னர்

65. தகவல் அறியும் உரிமையுடன் தொடர்பில்லாத அறிக்கை எது?

(A) விண்ணப்பக் கட்டணம் 10 ரூபாய்

(B) விண்ணப்பம் செய்து 15 நாட்களுக்குள் தகவல்கள் கிடைக்கும்

(C) இந்தச் சட்டம் 2005-ல் நடைமுறைக்கு வந்தது

(D) நாட்டின் பொது நிலைமைக்கு தீங்கு விளைவிக்கும் சட்டங்கள் தவிர மத்திய-மாநில அரசுகளின் உடைமையிலோ கட்டுப்பாட்டிலோ உள்ள நிறுவனங்களிலிருந்து தகவல்கள் பெறலாம்

66. குடிகிடப்போர்க்கு 10 சென்ட் வரை இடத்தின் உரிமையை வழங்கிடத் திட்டமிட்டு உருவாக்கிய நிலச்சீர்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு

(A) 1970 (B) 1969

(C) 1972 (D) 1973

67. கேரளத்தின் கலாச்சாரத் தலைநகரம் என அறியப்படுவது எது?

(A) திருவனந்தபுரம் (B) எர்ணாகுளம்

(C) திருச்சூர் (D) கோட்டயம்

68. கடல் மட்டத்திலிருந்து தாழ்ந்துள்ள இப்பகுதி கேரளத்தில் அமைந்துள்ளது. அது எந்தப்பகுதி?

(A) வைக்கம் (B) குட்டநாடு

(C) கோடநாடு (D) கொச்சி

69. முந்திரிப்பருப்புத் தொழிற்சாலைக்குப் பிரசித்தமான மாவட்டம் எது?

(A) வயநாடு (B) பத்தனம் திட்டை

(C) ஆலப்புழை (D) கொல்லம்

70. நேரு கோப்பை படகுப் போட்டி நடைபெறும் காயல் எது?

(A) வேம்ப நாட்டுக் காயல் (B) புன்னமடக் காயல்

(C) சாஸ்தாம் கோட்டை காயல் (D) அஷ்டமுடிக் காயல்

71. The opposite of 'extravagance' is :

(A) miserliness
(B) incorporeal
(C) misfeasance
(D) intravagance

72. "All that ———— is not gold".

(A) shines
(B) glitters
(C) sparkles
(D) clatters

73. Many people ———— the poor.

(A) looked ahead to
(B) looked forward to
(C) looked on to
(D) looked down on

74. The announcement of the results ———— awaited.

(A) are
(B) is
(C) were
(D) am

75. He works eight hours ———— day.

(A) the
(B) one
(C) an
(D) a

76. Nothing ———— disturbs his sleep.

(A) never
(B) everytime
(C) sometimes
(D) ever

77. ———— is a synonym of 'hostile'.

(A) Unfriendly
(B) Credible
(C) Unhappiness
(D) Disobedient

78. One who knows everything :

(A) Omniscient
(B) Master
(C) Scholar
(D) Omnipotent

79. Find the correct spelling :

(A) Buraucracy
(B) Bureaucracy
(C) Buroucracy
(D) Burocracy

80. The older he got ———— he became.

(A) more happier
(B) happier
(C) the happier
(D) the happy

81. Would you mind ———— this letter?

(A) post
(B) posts
(C) posted
(D) posting

82. 'I wish it wasn't raining' means :

(A) It is raining
(B) It isn't raining
(C) It will rain
(D) It wasn't raining

83. He did not eat the cake; she did not eat it ————.

(A) neither
(B) either
(C) or
(D) nor

84. The market is at the ———— end of the city.

(A) farther
(B) further
(C) farthest
(D) feather

85. The boy had finished his homework when ————.

(A) I called him
(B) I had called him
(C) I have called him
(D) I call him

86. She lives in Mumbai, ————

(A) isn't she?
(B) doesn't she?
(C) don't she?
(D) is she?

87. You can telephone me ———— you like.

(A) however
(B) whatever
(C) whenever
(D) whichever

88. If my father were there ————

(A) he has helped you
(B) he will help you
(C) he would help you
(D) he would have helped you

89. It is impossible to separate belief ———— emotion.

(A) with
(B) to
(C) for
(D) from

90. I appreciate her ———— in her studies.

(A) regular
(B) regularly
(C) regularity
(D) regularize

91. தமிழில் முதன்முதலாக ஞானபீட பரிசு பெற்ற எழுத்தாளர் :

(A) கபிலன்
(B) அகிலன்
(C) வண்ணநிலவன்
(D) மு. வரதராசன்

92. Do your duty with responsibility – இதன் சரியான மொழிபெயர்ப்பு :

(A) உனது வேலையைப் பொறுப்புடன் செய்தல் தவறு
(B) பொறுப்புடன் நடந்துகொள்
(C) உனது கடமையைப் பொறுப்புணர்வுடன் செய்யவும்
(D) உனது கடமையைச் சரியாகச் செய்

93. I donated my blood – இதனை எவ்வாறு சரியாக மொழிபெயர்க்கலாம்?

(A) நான் எனது இரத்தத்தைத் தானம் செய்தேன்
(B) நான் இரத்த தானம் செய்கிறேன்
(C) நான் இரத்த தானம் செய்தேன்
(D) நான் எனது இரத்தத்தைத் தானமாகக் கொடுப்பேன்

94. இவற்றுள் 'மா' என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள் அல்லாதது எது?

(A) பெரிய
(B) சிறிய
(C) மாமரம்
(D) விலங்கு

95. சரியான சொல் எது?

(A) முன்னூறு
(B) முண்ணூறா
(C) முந்நூறு
(D) முன்னூறா

96. கீழ்வருவனவற்றுள் சரியான வாக்கியம் எது?

(A) அவர் நடந்து சென்றது
(B) விலங்குகள் வேகமாக ஓடியது
(C) பறவைகள் பறந்து சென்றனர்
(D) மக்கள் விரைந்து சென்றனர்

97. குயில்பாட்டு பாரதி பாடிய காவியங்களுள் குறிப்பிடத்தக்கது: அவரது வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி நோக்கத்தக்கது – இவ்வாக்கியத்தில் குயில்பாட்டு என்ற சொல்லை மட்டும் அடையாளமிட்டுக்காட்ட எவ்வகை நிறுத்தற்குறியினைப் பயன்படுத்தலாம்?

(A) அடைப்புக் குறி
(B) இரட்டை மேற்கோள் குறி
(C) ஒற்றை மேற்கோள் குறி
(D) காற்புள்ளி

98. பண்புத்தொகைக்கு சான்று தருக :

(A) பைங்கொடி
(B) ஊறுகாய்
(C) தாமரைமுகம்
(D) விற்கொடி

99. 'பள்ளிகொண்டபுரம்' என்ற நாவலின் ஆசிரியர் யார்?

(A) அ. மாதவன்
(B) தி. ஜானகிராமன்
(C) நீலபத்மநாபன்
(D) பத்மநாபன் தம்பி

100. 'முத்தையா' என்பது யாருடைய இயற்பெயர்?

(A) கண்ணதாசன்
(B) வாணிதாசன்
(C) பாரதிதாசன்
(D) சுப்புரத்தினதாசன்